
தமிழ்நாடு அரசு

வாய்மையே வெல்லும்



# போக்குவரத்துத் துறை

## மானியக் கோரிக்கை எண். 48

★★★★★★★★★★

## இயக்கூர்திகள் சட்டங்கள் - நிருவாகம்

## மானியக் கோரிக்கை எண். 25



## அறிவிப்புகள் 2023 - 2024

# போக்குவரத்துத் துறை

## மானியக் கோரிக்கை எண். 48

★★★★★★★★★★

## இயக்கூர்திகள் சட்டங்கள் - நிருவாகம்

## மானியக் கோரிக்கை எண். 25

## அறிவிப்புகள்

## 2023 - 2024

**சா.சி. சிவசங்கர்**

போக்குவரத்துத் துறை அமைச்சர்

# போக்குவரத்துத் துறை

## 1) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பெண்களுக்கென பிரத்யேகமாக இருக்கைகள் ஒதுக்குதல்

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்யும் பெண்களுக்கென பிரத்யேக இருக்கைகள் போதுமான அளவில் இல்லாததால் பெண்கள் தனியாக பயணம் செய்ய தயங்குகின்றனர். எனவே, பெண்களுக்கு பிரத்யேகமாக அதிக இருக்கைகள் வழங்கப்பட்டால் அவர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயமின்றி நம்பிக்கையுடன் பயணிக்க விரும்புவர். இந்த தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பெண்களுக்கென தனியாக 4 இருக்கைகள் ஒதுக்கப்படும். பயண நேரத்திற்கு 24 மணி நேரம் முன்புவரை இணையதள முன்பதிவில் பெண் பயணிகளுக்கான இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கும்.

## 2) அரசு போக்குவரத்துக் கழக பணிமனைகளில் உள்ள உணவகங்களை நடத்துவதற்கு மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை

பெண்களுக்கு அதிகாரமளிக்கும் விதமாகவும், தரமான உணவுப் பொருட்களை வழங்குவதில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் விதமாகவும், பேருந்து பணிமனைகளில் உள்ள உணவகங்களை (Canteens) நடத்துவதற்கு மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.



## 3) அரசு போக்குவரத்துக் கழக பணிமனைகளில் உள்ள பணியாளர்கள் ஓய்வு அறைகளுக்கு குளிர்சாதன வசதியை ஏற்படுத்துதல்

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பணிபுரியும் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நீண்ட நேரம் பேருந்துகளில் பணி செய்வதால், அவர்கள் ஓய்வெடுக்க சிறந்த சூழ்நிலையை உருவாக்குவதற்காக, அரசு போக்குவரத்துக் கழக பணிமனைகளில் உள்ள பணியாளர்கள் ஓய்வு அறைகளில் குளிர்சாதன வசதி ஏற்படுத்தப்படும்.

### 4) உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள குன்னம் நகரில் புதிய பேருந்து பணிமனை அமைத்தல்

குன்னம் நகரம், பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள குன்னம் தாலுக்காவின் தலைமையிடம், பெரம்பலூரிலிருந்து 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அரியலூர் மாவட்ட தலைநகரிலிருந்து 16 கி.மீ. தொலைவிலுள்ள இந்நகரினை ஒட்டி அரசு மருத்துவமனை, பத்திரப்பதிவு அலுவலகம், சார்பு நீதிமன்றம், கால்நடை மருத்துவமனை, அரசு கலை அறிவியல் கல்லூரி ஆகியவை உள்ளன. மேலும், அதிக எண்ணிக்கையிலான சிமெண்ட் தொழிற்சாலைகள், அரசு மருத்துவ கல்லூரி, அரசு கலைக்கல்லூரி ஆகியவை அரியலூரை சுற்றி உள்ளன. மேலும், குன்னம், கோவில்களுக்கு பெயர்பெற்றது. அதன் அருகே சிறுவாச்சூர் மதுரகாளியம்மன் கோவில் உள்ளது.



அக்கோவிலுக்கு ஏராளமான பக்தர்கள் அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்கின்றனர். மேலும் குன்னம் வழியாக 29 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. குன்னம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம பொதுமக்கள், மாணாக்கர்கள், பணியாளர்கள் மேற்கண்ட நிறுவனங்களுக்கு பேருந்துகளில் சென்றுவர ஏதுவாக குன்னம் தொகுதியில் புதிதாக ஒரு தனி பணிமனையை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டத்தின் குன்னம் தொகுதியில் ரூ.3.55 கோடி செலவில் புதிய பேருந்து பணிமனை அமைக்கப்படும்.

## 5) உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின் கீழ் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் ஆவடி பேருந்து பணிமனை மற்றும் பேருந்து நிலையம் மேம்படுத்தல்

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி சட்டமன்ற தொகுதியில் உள்ள ஆவடி பணிமனை மற்றும் பேருந்து நிலையத்தில் அலுவலக கட்டடம் புதுப்பித்தல், சிமெண்ட் கான்கிரீட் தளம், உயர் கோபுர விளக்குகள் மற்றும் பயணிகளுக்கான இருக்கை வசதிகளுடன் கூடிய பேருந்து நிழற்குடை அமைத்தல் ஆகியவற்றுடன் ஆவடி பணிமனை மற்றும் பேருந்து நிலையம் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின் கீழ் ரூ.10.76 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.



## 6) உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின் கீழ் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் பாடியநல்லூர் பேருந்து பணிமனை மற்றும் பேருந்து நிலையம் மேம்படுத்தல்

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள பாடியநல்லூர் பேருந்து பணிமனை மற்றும் பேருந்து நிலையத்தில் அலுவலகக் கட்டடம், சிமெண்ட் கான்கிரீட் தளம் மற்றும் பயணிகளுக்கான போதிய வசதிகளுடன் பாடியநல்லூர் பேருந்து பணிமனை மற்றும் பேருந்து நிலையம் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின் கீழ், ரூ.5.43 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

## 7) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இளைஞர்களுக்கான வர்த்தக வாய்ப்புகள்

தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் நடவடிக்கையாக சுயதொழில் மூலம் வருமானம் ஈட்டும் வகையில் அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் உள்ள பயண சுமைப் பெட்டிகள் ஒரு மாதத்திற்கு ரூ. 6000/- வீதம் வாடகை அடிப்படையில் இளைஞர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் புறப்படும் மற்றும் சேருமிடங்களுக்கு இடையே விவசாய பொருட்கள் அல்லது தொழில்துறை தயாரிப்புகளை சிப்பம் (Parcel) மூலம் அனுப்ப இந்த பயணச் சுமைப் பெட்டிகளை பயன்படுத்தலாம். இத்திட்டம் ஓராண்டுக்கு மட்டுமே பொருந்தும்.



## 8) அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் வழக்கமாக பயணிக்கும் பயணிகளுக்கு பயணச் சலுகை அறிமுகப்படுத்துதல்

அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் ஒரு காலண்டர் மாதத்தில் ஐந்து முறைக்கு மேல் முன்பதிவு செய்து பயணம் செய்யும் பயணிகளுக்கு சிறப்பு சலுகையாக அடுத்த தொடர் பயணங்களுக்கு, அதாவது ஆறாவது பயணம் முதல், 50 சதவீதம் கட்டணச் சலுகை வழங்கப்படும். இந்தச் சலுகை அனைத்து அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கும் பொருந்தும்.

## 9) அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிமனை அளவில் பணிபுரியும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 10-ம் மற்றும் 12-ம் வகுப்பு பள்ளி இறுதி தேர்வில் முதல் மூன்று இடங்களை பெறும் மாணவ / மாணவியருக்கு பரிசுத்தொகை வழங்குதல்

அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள 315 பணிமனைகளில் ஒவ்வொரு பணிமனை அளவிலும், தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 10-ம் மற்றும் 12-ம் வகுப்பு பள்ளி இறுதி தேர்வில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ, மாணவியருக்கு முறையே ரூ.1500/- , ரூ.1000/- மற்றும் ரூ.500/- என ஆண்டுதோறும் ரூ.18.90 இலட்சம் செலவில் பரிசுத்தொகை வழங்கப்படும்.



## 10) அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளல்

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் பேருந்துகளில் நீண்ட நேரம் தொடர்ந்து பணிபுரிவதாலும், பணிமனைகள் போன்ற இடங்களில் இயந்திர சூழ்நிலைகளில் பணிபுரிவதாலும் அவர்களின் நலனை கருத்திற்கொண்டு மருத்துவ பரிசோதனை செய்ய மருத்துவ முகாம்கள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

# இயக்கூர்திகள் சட்டங்கள் - நிருவாகம்

**11) தென்காசி மாவட்டம், தென்காசி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினை பிரித்து ஆலங்குளம் தாலுக்காவில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அமைத்தல் மதிப்பீடு ரூ.44 இலட்சம்.**

ஆலங்குளம் மற்றும் வீ.கே.புதூர் தாலுக்கா மக்கள் ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகன பதிவு போன்ற சேவைகளை எளிதில் அவர்களின் பகுதியிலேயே பெறும் வகையில் தென்காசி மாவட்டம், தென்காசி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினை பிரித்து வீ.கே.புதூர் மற்றும் ஆலங்குளம் தாலுக்காவினை உள்ளடக்கி ஆலங்குளம் தாலுக்காவில் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி அலுவலகம்) அலுவலகம் அமைக்கப்படும்.

12) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினை பிரித்து இராஜபாளையம் தாலுக்காவில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அமைத்தல் மதிப்பீடு ரூ.43 இலட்சம்.

இராஜபாளையம் தாலுக்கா மக்கள், ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகன பதிவு போன்ற சேவைகளை எளிதில் அவர்களின் பகுதியிலேயே பெறும் வகையில் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினை பிரித்து இராஜபாளையம் தாலுக்காவில் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி அலுவலகம்) அலுவலகம் அமைக்கப்படும்.



13) பொது மக்கள் நலன் கருதி அரசின் சார்பில் தமிழ்நாட்டில் உள்ள 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 54 மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகங்களை உள்ளடக்கிய மொத்தம் 145 அலுவலகங்களில், ஓட்டுநர் தேர்வு நடத்தும் பொருட்டு 145 எண்ணிக்கையில் இலகு ரக மோட்டார் கார் வாகனங்கள் (LMV – Motor Car) கொள்முதல் செய்தல். மதிப்பீடு ரூ.625 இலட்சம்.

இலகு ரக வாகன ஓட்டுநர் உரிமம் (LMV CAR) பெற விரும்பும் பொது மக்களில், பெரும்பாலானோர் சொந்த வாகனம் இல்லாத காரணத்தினால் ஓட்டுநர் உரிமம் பெறும் பொருட்டு, ஓட்டுநர் பயிற்சி பள்ளியை அணுக வேண்டிய நிலை உள்ளது. அதனை தவிர்க்கும் பொருட்டு, இனிவரும் காலங்களில் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் / பகுதி அலுவலகங்களில், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கான தேர்வு நடத்தும் பொருட்டு, 145 அலுவலகங்களுக்கும் 145 எண்ணிக்கையிலான இலகு ரக மோட்டார் வாகனங்கள் (LMV CAR) ரூ.625 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

14) தமிழ்நாட்டில் உள்ள 20 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் முதற்கட்டமாக சோதனை அடிப்படையில் கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வுத்தளம் அமைத்தல். மதிப்பீடு ரூ.1000 இலட்சம்.

தமிழ்நாட்டில் உள்ள 145 (91+54) அலுவலகங்களில் தற்போது மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களால் (Manual Testing) ஓட்டுநர் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. சாலை பாதுகாப்பினை கருத்திற் கொண்டு, ஓட்டுநர்களின் தேர்வு திறனை மேம்படுத்தும் பொருட்டு இனி வரும் காலங்களில், 20 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் முதற்கட்டமாக சோதனை அடிப்படையில் கணிணிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வு தளம் அமைக்கப்படும்.



15) சாலை விபத்தில் காயம் அடைந்த நபர்களுக்கு உதவும் நற்கருணை வீரர்களை (Good Samaritan) ஊக்குவிக்கும் வகையில் ஏற்கெனவே மத்திய அரசால் வழங்கப்பட்டு வந்த ரூ.5000/- தொகையுடன், மாநில அரசின் பங்களிப்பாக சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து கூடுதல் தொகையாக ரூ.5000/- வழங்கப்படும்.

தற்போது, சாலை விபத்தில் காயம் அடைந்த நபர்களுக்கு உதவும் நற்கருணை வீரர்களுக்கு மத்திய அரசால் ரூ.5000/- ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இனிவரும் காலங்களில், மேற்படி நற்கருணை வீரர்களை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு மாநில அரசின் பங்களிப்பாக சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து கூடுதல் தொகையாக ரூ.5000/- வழங்கப்படும்.

**16) ஆதார் அட்டையை அடையாள ஆவணமாக பயன்படுத்தி, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு வராமலேயே (நேரடி தொடர்பின்றி) சேவைகளை குடிமக்களுக்கு வழங்குதல்.**

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மூலம் வழங்கப்படும் சேவைகளை பொது மக்கள் எவ்வித இடையூறுமின்றி பெறும் வகையில் நடவடிக்கைகள் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் நீட்சியாக, ஆதார் அட்டையை அடையாள ஆவணமாக பயன்படுத்தி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு வராமலேயே (தொடர்பு இல்லாத) ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகனப்பதிவு தொடர்பான 42 சேவைகளை இணையதளம் மூலம் பொது மக்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



**17) போக்குவரத்து வாகனங்களை இயக்குவதற்கு பொதுப்பணி வில்லை பெறுவதிலிருந்து விலக்களித்தல்.**

1989 ஆம் வருட தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளில் கூறப்பட்டுள்ள விதிகள் 7,8,9,10 ன்படி போக்குவரத்து வாகனங்களை இயக்குவதற்கு ஓட்டுநர்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் பொதுப்பணி வில்லை பெறவேண்டும். பிற மாநிலங்களில் (கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரா) இலகு ரக போக்குவரத்து வாகனம் இயக்க பொதுப்பணி வில்லை தேவையில்லை என்ற நிலை உள்ளது. எனவே, இலகு ரக வாகனங்கள் இயக்க ஓட்டுநர் உரிமம் பெற்றவர்கள், அனைத்து இலகு ரக போக்குவரத்து வாகனங்களையும் பொதுப்பணி வில்லை பெறாமலேயே இயக்க வசதியாக 1989 ஆம் வருட தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளில் கூறப்பட்டுள்ள விதிகள் 7,8,9,10 ஆகியவற்றை நீக்கம் செய்ய அறிவிக்கை செய்யப்படும்.

## 18) போக்குவரத்து வாகனங்களுக்கு தகுதிச்சான்று வழங்க தனியார் பங்களிப்பின் (PPP) மூலமாக தானியங்கி சோதனை நிலையங்கள் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் தற்போது போக்குவரத்து வாகனங்களுக்கு தகுதிச்சான்று மோட்டார் வாகன ஆய்வாளர்களால் வழங்கப்பட்டு வருகின்றது. ஒன்றிய அரசின் அறிவிப்பு எண் GSR No.272 (E), நாள் 5.4.2022 - ன் படி 1.4.2023-ம் நாள் முதல் அனைத்து கனரக போக்குவரத்து வாகனங்களுக்கும் 1.6.2024-ம் நாள் முதல் பிற போக்குவரத்து வாகனங்களுக்கும் தானியங்கி சோதனை நிலையத்தின் மூலமாகவே தகுதிச்சான்று வழங்கப்பட வேண்டும் என விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அரசுக்கு எவ்வித வருவாய் இழப்பின்றி தனியார் பங்களிப்பின் (PPP) மூலமாக முதற்கட்டமாக பின்வரும் 18 வட்டாரப் போக்குவரத்து அலுவலக எல்லைக்குட்பட்ட இடங்களில் தானியங்கி சோதனை நிலையங்கள் அமைக்கப்படும்.



| | | |
|---|---|---|
| செங்குன்றம் | தாம்பரம் | திருப்பெரும்புதூர் |
| வேலூர் | திண்டிவனம் | சேலம்(மேற்கு) |
| திருவரங்கம் | தஞ்சாவூர் | திருப்பூர்(வடக்கு) |
| கோவை(வடக்கு) | நாமக்கல்(வடக்கு) | ஈரோடு(கிழக்கு) |
| திண்டுக்கல் | மதுரை(தெற்கு) | இராமநாதபுரம் |
| விருதுநகர் | திருநெல்வேலி | தூத்துக்குடி |

**சா.சி. சிவசங்கர்**
போக்குவரத்துத் துறை அமைச்சர்